# திருவெறும்பூர்க் கோயில் வரலாறு

I

திருச்சி உறையூர் M. M. பெண்கள் உயர்நிலைப் பள்ளித்
தமிழ் ஆசிரியரும்,
அற்புதக்கனி, திருமுருகாற்றுப்படை விளக்கம் ஆசிரியரும்
H. R. & C. E. ஆதரவில் பல கோயில் வரலாறுகளை
எழுதியவரும் ஆகிய

**திரு R. பஞ்சநதம் பிள்ளை அவர்களால்**

எழுதப்பெற்று

தேவஸ்தான நிர்வாக அதிகாரிகள்

---

**திரு. S. இராமையா அவர்கள்,**
நிர்வாக அதிகாரி,
**திரு. T. K. தங்கவேல் முனையதிரியர் அவர்கள்,**
மானேஜிங் டிரஸ்டி & பிரஸிடெண்ட்,
கோவாபரேடிவ் கிரடிட், சொசைட்டி, திருவெறும்பூர்,
**திரு. M. தெக்ஷிணாமூர்த்தி அவர்கள்,**
டிரஸ்டி & ஜில்லா போர்டு மெம்பர், நவல்பட்டு, திருச்சி.
**திரு. S. A. முருகைய நாவலங்கியார் அவர்கள்,**
டிரஸ்டி & நேடிவ் டாக்டர், திருவெறும்பூர்.
ஆகியோர்களால் வெளியிடப்பெற்றது.

---

**ஸ்தான வெளியீடு.**

---

] 1953 [விலை 4 அணா

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
Q23:38.21192,T
N53
112791

11

112791

Q23:38.21192.T
N53

V

# முன்னுரை

தெய்வ உணர்ச்சியை உண்டாக்கும் சிறப்பிடங்களாக ஆன்றோர்கள் அமைத்த ஆலயங்கள் விளங்குகின்றன. அவைகளுள் திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் திருச்சிக்குக் கிழக்கே 5 மைல் தூரத்தில் திருஎறும்பூர் என்னும் சிறந்த தலம் உள்ளது. தேவர்கள் எறும்பு வடிவத்துடன் வழிபட்டதால் இப்பெயர் பெற்றது. சமய குரவர்களால் தேவாரம் பாடப்பெற்ற தலங்களுள் இது ஒன்று. கோயிலுக்கு வருவோர் கோயிலின் பெருமைகளையும் அறிந்து கொள்வது நலம். சென்னை அறநிலையப் பாதுகாப்பு இலாகா (Hindu Religious and Charitable Endowments) அனுப்பிய சுற்றறிக்கையின்படி இவ்வரலாறு, திருவெறும்பியூர்ப் புராணத்தைத் தழுவிச் சுருக்கமாய் எழுதப்பெற்றது. இதில் பழம் பெருமைகளைத் தெரிவிக்கும் கல்வெட்டுச் செய்திகளும், வரலாறுகளும், தேவாரப் பாடல்களும், புராணப் பாடல்களும் சேர்க்கப்பெற்றுள்ளன. வரலாறுகளில் அகத்தியர் ஞானோபதேசம் பெற்ற பகுதி படித்து இன்புறத்தக்கது. அன்பர்கள் படித்துத் திருவெறும்பூர் ஈசரின் திருவருளைப் பெறுக.

திருச்சிராப்பள்ளி,
12—10—53.

**R. பஞ்சநதம் பிள்ளை,**
தமிழ் ஆசிரியர்.

171

# அணிந்துரை

திருவெறும்பூர் ஒரு பழைய நாளைய நல்லூர். புல்லிய அறிவுடைய உயிராகிய எறும்பும் இவ்வூரில் சிவபெருமானை வழிபட்டுத் திருவருள் பெற்றதாக வரலாறு. ஆண்டவனுக்கும் எறும்பீசர் என்றே திருப்பெயர். எனவே, ஆறு அறிவுடைய மக்களாகப் பிறந்தவர்கள் இந்த நல்லூரில் கட்டாயம் வழிபடவேண்டியவர்கள் என்று தெரிகிறது. திருச்சிராப்பள்ளி நகரத்திற்குக் கீழ்பால் ஐந்துகல் தொலைவில் ஒரு குன்றின் மீது இக்கோவில் அமைந்திருப்பது இயற்கை அழகு அளிப்பதாகும்.

கோவில்களை வழிபாட்டுக்குரிய இடங்களாக ஆக்கிக்கொள்ள வேண்டுமானால் சில செயல்களைக் கட்டாயம் செய்தாகவேண்டும். அவற்றில் ஒன்று கோயிலைப் பற்றிய வரலாறு வரைந்து வழிபட வருவோர்க்குப் பயன் படுமாறு வழங்குவதாகும். இதனைத் திருவெறும்பூர்க் கோவில் அறங்காவலர்கள் நன்றாக உணர்ந்து இந்த வரலாற்றை எழுதுவித்திருக்கிறார்கள்.

பல கோயில்களின் செய்திகளை நூல்கள், கல்வெட்டுக்கள் முதலியவற்றால் செவ்வையாக அறிந்துகொண்டு வரலாறுகள் வரைவதில் வன்மை படைத்தவர்களாகிய போற்றுதற்குரிய அன்பின் திருவினர் புலவர் **ஆர். பஞ்சநதம் பிள்ளை** அவர்கள், இவ்வரலாற்று நூலை முறைப்படுத்திப் பல செய்திகளோடு அழகான வகையிலே எழுதியிருக்கின்றார்கள். பலருக்கும் இது பயன்படும் என்பது திண்ணம்.

112791

இந்த அணிந்துரையை எழுதிச் சிவ வடிவமான இவ்வரலாற்று நூலில் நானும் தொடர்பு கொள்ளு மாறு செய்த எனது அன்பின் நண்பர், சிவ நெறிச் செல்வர், இக்கோயில் அறங்காவலர் திரு. எம். தெக்ஷிணு மூர்த்தி அவர்கட்கு என்றும் நன்றியுடையேன்.

கீ. இராமலிங்கம், எம். ஏ.,
நகராட்சி ஆணையர், புத்தூர்
திருச்சிராப்பள்ளி.

VI

# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | கோயிலும் இருப்பிடமும் ... | ... 1 |
| 2. | தலத்தின் பெயர்கள் ... | ... 3 |
| 3. | கோயிலின் அமைப்பு ... | ... 4 |
| 4. | கோயிலின் படம் ... | ... 5 |
| 5. | மூர்த்திகளின் பெயர்கள் ... | ... 6 |
| 6. | தீர்த்தங்கள் ... | ... 6 |
| 7. | தலப் பெருமைகள் ... | ... 7 |
| 8. | சுற்றுக்கோயில்கள் ... | ... 9 |
| 9. | திருப்பணிகள் ... | ... 9 |
| 10. | வழிபட்டோர் ... | ... 10 |
| 11. | தினப்பூஜையும், திருவிழாக்களும் | ... 10 |
| 12. | வருமானமும் சொத்துக்களும் ... | ... 11 |
| 13. | நிர்வாகம் ... | ... 11 |
| 14. | கல்வெட்டுக்கள் ... | ... 12 |
| 15. | சிற்பச் சிறப்புக்கள் ... | ... 15 |
| 16. | சரித்திர வரலாறு ... | ... 16 |
| 17. | புராண வரலாறுகள் ... | ... 16 |
| 18. | இலக்கியங்கள் ... | ... 23 |

உ

# திருவெறும்பூர்க் கோயில் வரலாறு.

இன்பமும் பிறப்பும் இறப்பின்னொடு
துன்பமும் உடனே வைத்த சோதியான்
அன்பனே அரனே என்றரற்றுவார்க்கு
இன்பனுகும் **எறும்பியூர்** ஈசனே.

## 1. கோயிலும் இருப்பிடமும்

**யா**வற்றையும் கடந்த பரம்பொருளாகிய இறைவன் உலகத்திலுள்ள பல உயிர்களும் துன்பம் நீங்கி இன்பம் பெற்று உய்யும் வண்ணம் தன் கடந்த நிலையான அருவநிலையிலிருந்து இறங்கி, இப் பூவுலகத்தில் ஆங்காங்குள்ள பல தலங்களில் உருவத் திருமேனி கொண்டு எழுந்தருளியிருந்து பக்தியுடன் வழிபடும் அடியார்களுக்கு அருள் செய்து வருகின்றான். அத்தகைய சிறப்பிடங்களே ஆலயங்கள் ஆகும். பசுவின் உடல் முழுவதும் பால் மறைந்திருந்தபோதிலும் மடியின் மூலமாகவே பால் வெளிப்படுவது போலவும், சூரியன் எங்கும் பரவியிருந்தபோதிலும் பளிங்குக் கல்லின் மூலமே கிரணங்கள் விரைவில் வெளிப்படுவது போலவும், நிலத்துக்கடியில் நீர் இருந்தாலும் தோண்டிய இடத்தில் தானே நீர் தோன்றுவதுபோலவும், இறைவன் எங்கும் வியாபித்திருந்த போதிலும், பெரியோர்கள் அமைத்த ஆலயங்களில் உள்ள மூர்த்திகளின் மூலமாகவே இறைவன் வெளிப்பட்டு அன்பர்களுக்கு அருள் செய்வான். "இருஞ்சுரபிக் கெங்கும் உருக்காண ஒண்ணுத பால் முலைப்பால் விம்மி ஒழுகுவதுபோல வெளிப்பட்டருள்வன் அன்பர்க்கே". (சிவஞான சித்தியார்) ஆதலின் பெறுவதற்கருமையான மனிதப் பிறவியைப் பெற்றவர் அனைவரும் பசுபதியாகிய பரமனை அன்பினுல்

வழிபட்டு அவன் வகுத்த நன்னெறியில் சென்று, அவனருளைப் பெற முயலுதல் தலையாய கடமையாகும். "மானுடப் பிறவிதானும் வகுத்தது மனவாக்காயத்து ஆனிடத் தைந்தும் ஆடும் அரன்பணிக் காகஅன்றோ" என்று ஆன்றோரும் கூறியுள்ளனர்.

தென்னாடாகிய தமிழ் நாட்டில் பெருமான் உறையும் கோயில்கள் பல. அவற்றுள் சைவ சமய குரவர்களால் தேவாரம் பாடப்பெற்ற 274 தலங்கள் உள்ளன. அவைகளுள் கங்கையிற் புனிதமாகிய காவிரி நதி பாயும் சோழ நாட்டில், காவிரிக்குத் தென்கரையில் திருச்சிராப்பள்ளி ஜில்லா — திருச்சி தாலூகாவில், திருச்சிக்குக் கிழக்கே 5 மைல் தூரத்தில் திருவெறும்பூர் என்னும் சிறந்த தலம் உள்ளது. இது மலைக்கோயில். தேவாரப் பாடலின்படி இது திருவெறும்பியூர் (திரு-எறும்பியூர்) என்று சொல்லப்படும். திருச்சி — தஞ்சாவூர் இருப்புப் பாதையில் திருவெறும்பூர் ரயில் நிலையத்திலிருந்து வடமேற்கில் அரை மைல் தூரத்தில் இத்தலம் உள்ளது. திருச்சி கோட்டையிலிருந்து மோட்டார் (Bus) மூலமாகவும் இத்தலத்தை அடையலாம். இவ்வூரின் ஜனத்தொகை சுமார் 4000. இவ்வூரில் ஜில்லா போர்டைச் சேர்ந்த ஆரம்பப் பாடசாலை, ஹரிஜன் பாடசாலை, மானேஜ்மெண்ட்டுக்குள்பட்ட முக்குலத்தார் உயர்நிலைப் பள்ளி ஆகிய மூன்று பள்ளிக்கூடங்கள் உள்ளன. தபால் நிலையமும், போலீஸ் நிலையமும், லோகல் பண்டு ஆஸ்பத்திரியும் இருக்கின்றன. ஜில்லா போர்டுக்குள்பட்ட ஒரு சந்தை வியாழக்கிழமை தோறும் நடைபெறுகிறது. இவ்வூரில் கருங்கல் சல்லிக் கற்கள் உடைக்கப்பட்டுப் பல இடங்களுக்கும் அனுப்பப்படுகின்றன. வடக்கு வீதியில் ஸ்ரீ கட்டைக்கழிச் சுவாமிகளின் மடம் ஒன்றுளது.

முக்கியமாக இவ்வூரில் திருச்சிராப்பள்ளி அகில இந்திய ஒலிபரப்பு நிலையத்தின் (All India Radio) ஒலி

பரப்பி (Broadcasting Station) அமைக்கப் பெற்றுள்ளது. திருச்சியிலிருந்து ஒலி பரப்பும் நிகழ்ச்சிகள் இவ்விடத்திலிருக்கும் மின்சாரக் கம்பத்தின் மூலம் பரப்பப்படுகின்றன. பிறநிலையங்களிலிருந்து ஒலிபரப்பும் நிகழ்ச்சிகளை வாங்கிக்கொள்ளும் கருவியும் இவ்விடத்தில் உள்ளது. எனவே இவ்வூர் ஒரு கிராமமாய் இருந்தாலும் நாளடைவில் ஓர் நகரம்போல விளங்கலாம் எனத் தெரிகிறது.

## 2. தலத்தின் பெயர்கள்

இம் மலைக்கோயில் புராணப்படி மணிகூடம் என்றும், இரத்தினகூடம் என்றும் சொல்லப்படும். மேலும் திருவெறும்பிபுரம், எறும்பீசம், பிரமபுரம், இலக்குமிபுரம், மதுவனபுரம், இரத்தினகூடபுரம், மணிகூடபுரம், குமாரபுரம் என்ற பெயர்களும் வழங்கும். பிரமன், இலக்குமி, முருகன் முதலியோர் வழிபட்டதால் இப்பெயர்கள் அமைந்தன. தேவாரப் பாடலின்படி இத்தலம் திருஎறும்பியூர் என்று சொல்லப்படும். வடமொழியில் பிபிலீச்சுரம் என வழங்கும். திருச்சி ஜில்லா கெஜட்டீர் புத்தகத்தில் எலுமீசரம் என்றும், எறும்பேசுவரம் என்றும் சொல்லப்படுகிறது. தற்போது திருவரம்பூர் என்று பெரும்பாலும் சொல்லப்படுகிறது. தேவர்கள் எறும்பின் வடிவத்தில் இறைவனை வழிபட்டதால் திருஎறும்பியூர் என்ற பெயர் ஏற்பட்டது. இத்தலத்துக்குரிய மரம் வில்வமரம்.

இறைவனுடைய படைப்புப் பொருள்களில் உருவத்தில் பெரியது யானை. உருவத்தில் சிறியது எறும்பு. யானைமுதலாக எறும்பு ஈருகச் சொல்லப்பட்ட பற்பல உயிர்களும் இறைவனை வழிபட்டுப் பேறு பெற்றதைப் பல நூல்களால் அறிகிறோம். யானை வழிபட்ட தலம் திருவானைக்கா. எறும்பு வழிபட்டது திருஎறும்பூர். இந்த இரண்டு தலங்களும் திருச்சி தாலுகாவில் அமைந்திருப்பது பெருஞ் சிறப்பாகும். "அத்திமுதல் எறும்

பீருன உயிர் அத்தனைக்கும் சித்தம் மகிழ்ந்தளிக்கும் தேசிகன்" என்று இறைவனைப் போற்றுகிருர் ஒருவர். "யானைமுதலா எறும்பீருய ஊனமில் யோனியின்" என்று திருவாசகம் கூறும்.

ஊர்வனவற்றில் எறும்பு ஓர் வகை. எறும்பின் மூலம் பல உண்மைகளை அறிகிருேம். உணவுப்பொருள்களை மணத்தால் அறிவது, வெளிச் செல்லும்போது ஒழுங்காகவும், வரிசையாகவும் செல்வது, எதிர்காலத்துக்கு ஆகவேண்டியதை நிகழ்காலத்திலேயே செய்து கொள்வது, விடாமுயற்சி முதலியன. எறும்பைப் பற்றிய பழமொழிகளும் உண்டு. 'எறும்பூரக் கல் தேயும்', 'எறும்புந்தன் கையால் எண்சாண்' 'எறும்பு முட்டைகொண்டு திட்டைஏறிஞல் மழைவரும்' என்பவை முதலியன.

## 3. கோயிலின் அமைப்பு

கோயில் கிழக்கு நோக்கி மலைமேல் அமைந்துள்ளது. கீழேயிருந்து மேலிடம் வரையில் 115 படிகள் உள்ளன. கீழே அடிவாரத்தில் ஓர் பிரகாரம் உள்ளது. அதில் தேரோட்டமும், புறப்பாடுகளும் நிகழும். மலைமேல் இரண்டு பிரகாரங்கள் உள்ளன. ஒன்று கோயிலுக்குள்ளேயும், மற்ருென்று கோயிலுக்கு வெளியிலும் உள்ளன. உள்பிரகாரத்தில் விநாயகர் முதலிய சந்நிதிகளும் வெளிப்பிரகாரத்தில் அம்மன் கோயிலும் உள்ளன. இவ்விடத்தில் தூய காற்று வீசுவதைக் காணலாம். மலைமேல் உள்ள வெளி மதிலின் கிழமேலடி 243. தென்வடலடி 144. உள் மதிலின் கிழமேலடி 126. தென்வடலடி 96. அம்மன் கோவில் தெற்கு நோக்கி இருக்கிறது. இதன் கிழமேலடி 36. தென்வடலடி 48. கீழ்புரம் அடிவாரத்தில் தேவஸ்தான அலுவலகமும், களஞ்சியமும் உள்ளன. கோயிலின் அமைப்பைக் காட்டும் படம் தனியே உள்ளது.

## 4. கோயிலின் படம்

தென்வடல் 144 அடி




### எண்களின் விளக்கம்

1. விநாயகர்
2. சோமாஸ்கந்தர்
3. முருகர்
4. லிங்கம்
5. நால்வர்
6. இலக்குமி
7. மூலலிங்கம்
8. உள்வாயில்
9. நவக்கிரகம்
10. மடைப்பள்ளி
11. கோபுரவாயில்
12. வடக்குவாயில்
13. அம்மன் கோவில்
14. வாயில்
15. மலைப்படிகள்
16. சுரங்கம்
17. நந்தி.



## 5. மூர்த்திகளின் பெயர்கள்

இத்தலத்தின் விநாயகருக்குப் பாலச்சந்திர விநாயகர் என்றபெயர் வழங்கப்படுகிறது. மூலமூர்த்திக்கு எறும்பீசர், எறும்பீஸ்வரர், மதுவனேசுவரர், மணிகூடாசலபதி, பிபிலிகேசுவரர், மாணிக்கநாதர் முதலிய பெயர்கள் வழங்குகின்றன. கல்வெட்டுக்களில் திருமலை ஆள்வார், திருவெறும்பூர் ஆள்வார், திருவெறும்பியூர் உடைய நாயனுர், தென் கயிலாயத்து மகாதேவர், ஆதித்தபட்டாரகர் முதலிய பெயர்கள் காணப்படுகின்றன. பிள்ளையார் க்ஷேத்திர பலதேவன், பிள்ளையார் பகவதி என்னும் பெயர்கள் சில மூர்த்திகளுக்கு வழங்கப்பட்டன. திருநாவுக்கரசர் தம் திருத்தாண்டகத்தில் மலைமேல் மாணிக்கம் என்றும், செழுஞ்சுடர் என்றும் குறிக்கின்ருர். அம்மனுக்கு நறுங்குழல் நாயகி, சௌந்தர நாயகி, மதுவனவீஸ்வரி, இரத்திஞம்பாள் முதலிய பெயர்கள் வழங்குகின்றன.

## 6. தீர்த்தங்கள்

*1.* **பிரம்ம தீர்த்தம்** :— இது கோயிலுக்கு முன்னே உள்ள தெப்பக்குளம். பிரம்மதேவன் பெயரால் ஏற்படுத்தப்பட்டது. இதில் ஸ்நானம் செய்பவருடைய பாவங்கள் நசிக்கப்படுவதால் பாவநாசத் தீர்த்தம் என்றும் பெயர்பெறும். இதில் வைகாசி மாதம் பௌர்ணமிக்கடுத்த துதியை நாளில் தெப்ப விழா நடைபெறும்.

*2.* **பதும தீர்த்தம்** :— இது கோயிலுக்கு ஈசான திசையில் இலக்குமியின் பெயரால் அமைந்தது. இலக்குமி தீர்த்தம் என்றும் பெயர்பெறும்.

*3.* **மது தீர்த்தம்** :— இது தேவர்கள் பெயரால் அமைந்தது.

*4.* **குமார தீர்த்தம்** :— கோயிலுக்கு வடபுறத்தில் குமாரக் கடவுளின் பெயரால் அமைந்தது.

இவைகளையல்லாமல் சூரியபுட்கரணி, சந்திரபுட்கரணி, கல்யாண தீர்த்தம் முதலிய தீர்த்தங்களும் உள்ளன. இறைவனுக்கும் தீர்த்தன் என்ற பொதுப் பெயர் உண்டு.

## 7. தலப் பெருமைகள்

இத்தலம் தென் கைலாயம் எனப் புகழப்படுவது. மேருமலையின் ஒரு துண்டாகச் சொல்லப்படுவது. மலை மேல் அமைந்த இத்தலம் மருத நிலமாகிய நன்செய் நிலங்களுக்கு நடுவில் அமைந்துள்ளது. சுற்றிலும் வாய்க்கால்களும், நீரோடைகளும் செல்வதால் குளிர்ச்சி பொருந்தியது. பழமையான சின்னங்களையும், தற்கால நாகரீகத்துக்கேற்ற சாதனங்களையும் உடையது. மூல மூர்த்தி சுயம்புமூர்த்தி. இத்தலத்துப் பெருமானை பிரமன், திருமகள், இரதி, இந்திரன் முதலிய தேவர்கள், அக்கினி, முருகன், அகத்தியன், நைமிச முனிவர் முதலியோர் பூசித்துப் பேறு பெற்றுள்ளார்கள். இந்திரன் எறும்பு வடிவங்கொண்டு இறைவனைப் பூசிக்கும்போது **பெருமான் திருமுடி சாய்த்து** ஏற்றுக்கொண்டான். இது இத்தலத்துக்குள்ள தனிப் பெருமையாகும். 'குலிசக் கையான் எறும்பான அஃறிணையின் உருக்கொடு,' என்னும் வரி இதனை வலியுறுத்தும். இங்ஙனமிருக்க, கரன் எறும்புருவங்கொண்டு பூசித்ததாகச் சொல்லப்படுகிறது. இத்தலம் பல கல்வெட்டுக்களையும் சிற்பங்களையும் உடையது. திருநாவுக்கரசரால் பாடப்பட்ட திருக்குறுந்தொகை, திருத்தாண்டகம் என்னும் பதிகங்களை யுடையது. திருவெறும்பியூர்ப் புராணம் என்னும் இலக்கியத்தை உடையது. பல தீர்த்தங்களைக் கொண்டது. எனவே மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்றிலும் பெருமை உடையது. மேலும் இக்கோயிலின் உள் பிரகாரத்தில் மடைப்பள்ளிக்குப் பக்கத்தில் ஓர் சுரங்கம் உள்ளது. அதைப்பற்றிய விவரம் ஒன்றும் தெரியவில்லை. வடக்குத் தெருவில் **ஸ்ரீ கட்டைக்கழிச் சுவாமிகள்**

என்னும் மகான் ஒருவருடைய மடம் ஒன்றுள்ளது. இவர் பல அற்புதங்களைச் செய்ததாகச் சொல்லப்படுகிறது. இவர் சர்வதாரி வருடம் மாசி-மீ 14-உ (1889ல்) இறைவனுடன் கலந்ததாகச் சொல்லப்படுகிறது.

"Thiruverumbur:—Five miles north east of Trichinopoly. Population 1279. Railway station. Is also called Erumbeeswaram. The name is derived from erumbu, an ant and is supposed to be due to Karan the brother of Trisira the hero of Trichinopoly having worshipped the lingam here in the form of that insect. The temple to Siva on the top of a rocky hill is well carved and its appearance suggests a jain origin. It was of importance during the sieges of Trichinopoly as a Military Post. A recently deceased saint named *Kattakaleeswami* about whom many curious stories are told, lies buried in the village. He worn no clothes and never spoke drank refuse and performed many miracles. His laughter and sorrow were considered omens of good and evil. His tomb has been handsomely decorated and the anniversary of his death is celebrated with pomp in Masi. The temple on the rock of Erumbeswaram was also fortified." (Trichinopoly Gazetteer.)

இதில் கரன் என்பவன் எறும்பு வடிவங்கொண்டு வழிபட்டதாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால் இந்திரன் எறும்பு வடிவத்துடன் வழிபட்டான் என்று புராணம் கூறுகின்றது.

## 8. சுற்றுக் கோயில்கள்

1. கைலாசநாதர் கோயில். இது வடபுறத்தில் பாறையில் உள்ளது.

2. விநாயகர் கோயில். இது அடிவாரத்தில் கீழ் புறத்தில் வாகன மண்டபத்தில் உள்ளது.

3. அனுமார் கோயில். ஷெ இடத்தில் உள்ளது.

4. அரசு காத்தம்மன் கோயில். இது கிராம தேவதை. இதன் உற்சவச் சிலே மலேக்கோவிலில் உள்ளது. முன்னே இதற்குத் திருவிழா நடத்திய பிறகு தான் மலேக்கோயிலின் பெருவிழா நடைபெறும்.

## 9. திருப்பணிகள்

இக்கோயிலில் பழங்காலம்முதல் பிற்காலம் வரையில் பற்பல திருப்பணிகள் அவ்வப்போது நடந்துவந்திருக்கின்றன. புதிய கோயிலே அமைப்பதைப்பார்க்கிலும் பழமையான கோயிலேப் புதுப்பித்தல் மிக்க புண்ணியத்தைத் தரும் என்பர். அதன்படி நடைபெற்ற திருப்பணிகளின் விவரம் :—

சோழமன்னர் காலத்தில் கோ. ராஜகேசரி பன்மனுடைய ஆட்சியில் சிறுதவூருடையான் வேளூரன் வீர நாராயணச் செம்பியன் வெய்தி வேளான் என்பவன் திருவெறும்பியூர் ஆள்வார்க்கு விமானம் எடுப்பித்த செய்தி கல்வெட்டுக்களால் தெரியவருகிறது. மேலும் திம்மிகுடி என்னும் ஊரில் இருந்த ஓர் அம்மையாரால் மலேமேல் உள்ள ஆதித்தபட்டாரகர் கோயிலில் சில திருப்பணிகள் நடந்திருக்கின்றன. பிறகு சுமார் 60 ஆண்டுகளுக்குமுன் கோயில் திருப்பணி நடந்திருக்கிறது. பிறகு குரோதன வருடம் மார்கழியில் 1925ம் ஆண்டில் பொது வசூலில் தெப்பக்குளம் படித்துறைத் திருப்பணி நடந்திருக்கிறது. பிறகு நாட்டுக்கோட்டை நகரத்தா

ருடைய பொது முயற்சியால் பெரிய மணி செய்யப் பட்டுக் கோயிலில் நாட்டப்பட்டிருக்கிறது. பூஜை நேரங் களில் மணி அடிக்கப்படுகிறது. மணியோசை ஆங்காங் குள்ள மக்கள், மலைமேல் உறையும் பெருமானைச் சிறிது நேரம் தியானிப்பதற்குத் தூண்டுவதாய் உள்ளது. சுவாமி கோயில் விமானத்தின் கலசம், சென்ற ஆண்டில் ஏற்பட்ட புயல்காற்றினால் சேதம் அடையவே, அதைப் புதுப்பித்து 26—1—53 திங்கட்கிழமை நாளில் கலசப் பிரதிஷ்டை விழா நடந்தது. தற்போது அடிவாரத்தி லுள்ள விநாயகர் கோயிலில் மானேஜிங் டிரஸ்டி திரு. T. K. தங்கவேல் முனையதிரியர் அவர்களின் சொந்தப் பொறுப்பில் திருப்பணி நடைபெறுகிறது. மலைக் கோயிலில் மேலும் பல திருப்பணிகள் நடைபெற வேண்டியிருக்கின்றன. செல்வம் படைத்த சிவநேசச் செல்வர்கள் திருப்பணிகளை நிறைவேற்றி வைப்பார் களாக.

## 10. வழிபட்டோர்

இத்தலத்துப் பெருமானை பிரமன், திருமகள், இரதி, இந்திரன், அக்கினி, முருகன், அகத்தியன், நைமிச முனிவர், முதலியோர் வழிபட்டுப் பேறுபெற்றுள்ளார் கள். அல்லாமல் பல சோழ மன்னர்களும், சுந்தர பாண்டியன் முதலான பாண்டிய மன்னர்களும், இறை வனை வழிபட்டுப் பல திருப்பணிகளைச் செய்துள்ளார் கள். திருநாவுக்கரசர் திருக்குறுந்தொகை, திருத்தாண் டகம் என்னும் பதிகங்களைப் பாடி இறைவனைப் போற்றியுள்ளார்.

## 11. தினப் பூஜையும் திருவிழாக்களும்

இத்தலத்தில் உள்ள பெருமானுக்கும், பிற மூர்த்தி களுக்கும் தினந்தோறும் காலை, உச்சி, மாலை, இரவு ஆகிய நான்கு காலங்களிலும் அபிஷேக ஆராதனைகள் நடைபெறுகின்றன. மூல லிங்கத்துக்கு மட்டும் தண்

ணீர்ப்படாமல் அபிஷேகம் உண்டு. பூஜை நேரங்களில் பெரிய மணி அடிக்கப்படுகிறது.

ஆண்டுதோறும் வைகாசி மாதத்தில் பெருந் திருவிழா 10 நாட்கள் வரையிலும் நடைபெறும். வளர் பிறையில் புனர்பூச நாளில் திருவிழா தொடங்கி, விசாக நாளில் தீர்த்தவாரியும், அடுத்த நாட்களில் பல்லக்கு விழாவும், தெப்ப விழாவும் நடைபெறும். விழாக் காலங்களில் தேவார பாராயணமும், சமயச் சொற்பொழிவுகளும், இசை நிகழ்ச்சிகளும் நிகழும்.

## 12. வருமானமும் சொத்துக்களும்

இக் கோயிலுக்கு ஆண்டுதோறும் மனை வாடகை முதலியவைகளால் சுமார் 500 ரூபாய் வருமானம் வரும். கோயிலுக்குரிய நிலங்களின் குத்தகை மூலம் சுமார் 1250 கலம் நெல் வருமானம் கிடைக்கும். இத்தலத்தைச் சேர்ந்ததாக திருவெறும்பூரைச் சார்ந்த கோனுடு 32 கிராமங்கள் உள்ளன. அந்தந்தக் கிராமங்களிலிருந்து குத்தகையாக நெல் வந்துசேரும்.

## 13. நிர்வாகம்

இக்கோயிலின் நிர்வாகம் 1946வது வருடத்துக்கு முன் தேவஸ்தான கமிட்டியின் மேற்பார்வையில் இருந்து வந்தது. 1946ல் ஸ்கீம் ஏற்பட்டு அந்த ஆண்டிலிருந்து சென்னை அறநிலையப் பாதுகாப்பின் (Hindu Religious & Charitable Endowments) நேர் நிர்வாகத்தில் இருந்து வருகிறது. அதன்படி நியமிக்கப்பெற்ற நிர்வாக அதிகாரி கோயில் காரியங்களைக் கவனித்து வருகிறார். மேற்படி கழகத்தாரால் நியமிக்கப்பட்ட தர்மகர்த்தாக்களும் உடனிருந்து கவனித்து வருகிறார்கள்.

## 14. கல்வெட்டுக்கள்

இக்கோயிலின் பழமையையும், முற்கால மன்னர்களின் தர்மங்களையும் அறிவதற்குப் பல கல்வெட்டுக்கள் உள்ளன. அடிவாரத்தில் முன் மண்டபத்திலும், மலைமேல் சுவாமி கோயிலின் உள்பிரகாரத்துச் சுவர்களிலும் சுமார் 49 கல்வெட்டுக்கள் உள்ளன. அவைகள் கவர்ன்மெண்டாரால் அவ்வப்போது நகல் எடுக்கப்பட்டுள்ளன. அவை 1892ம் ஆண்டில் 100, 101 எண்களிலும், 1914ல் 96 முதல் 142 வரை உள்ள எண்களிலும் பதிவு செய்யப்பட்டுள்ளன. இக் கல்வெட்டுக்களிலிருந்து பழமையான செய்திகள் சிலவற்றை அறியலாம். அவைகளாவன:

முற்காலத்தில் இத்தலப் பகுதி தென்கரை பாண்டிய குலாசனி வளநாடு, வட காவிரி நாடு, தென்கள வாளி நாடு முதலிய பெயர்களால் வழங்கப்பெற்று வந்தது. இவ்வூருக்கு ஸ்ரீ கண்டசதுர்வேதி மங்கலம், தென்கயிலாயம், திருமலை, திருஎறும்பியூர் முதலிய பெயர்கள் வழங்கி வந்தன. மலைமேல் உறையும் இறைவனுக்கு ஆள்வார், நாயனுர், மகாதேவர், ஆதித்தபட்டாரகர் முதலிய பெயர்கள் வழங்கப்பெற்று வந்தன. மதுரைகொண்ட பரகேசரி வர்மன், காந்தளூர்ச்சாலை கலமறுத்த ராஜகேசரி வர்மன், முதலாம் ராஜராஜ சோழன், விக்கிரம சோழன், பாண்டியன் மாறவர்மன் சுந்தர பாண்டியன், ராஜேந்திரதேவன் III முதலிய மன்னர்களின் ஆட்சிக் காலங்களில் கோயிலுக்குப் பல தர்மங்கள் செய்யப்பட்டு வந்தன. ஆளுங்கணத்தார் என்னும் பஞ்சாயத்தார், கோயில் காரியங்களை மேற்பார்வை செய்துகொண்டு வந்திருக்கிறுர்கள். மாளிகைக் கோல் என்னும் அளவு கருவி உபயோகிக்கப்பட்டு வந்தது. காளிஅவிட்டன் என்பவன் கோயில் கணக்குகளைத் தணிக்கை செய்தது, பிள்ளையார் பகவதி ஆள்வாருக்கு விழா நடைபெற்றது, கழஞ்சு என்னும் பொன்

நாணயம் வழங்கி வந்தது. கால்வாய் வெட்டியது, கோயிலைச் சேர்ந்தவர்களுக்கு வரிவிலக்குச் செய்தது, வரவு செலவுகளை வெளியிட்டது, இவை போன்ற செய்திகள் காணப்படுகின்றன.

**கோயிலுக்குச் செய்யப்பெற்ற தர்மங்கள் :—**

கோயிலில் நடைபெறும் பூஜை முதலிய காரியங்களுக்காகப் பல நிலங்கள் தானம் செய்யப்பட்டன. கோயிலில் நந்தா விளக்கெரிப்பதற்குப் பல ஆடுகளும், கழஞ்சு என்னும் பொன் நாணயங்களும் கொடுக்கப்பட்டன. விளக்கெரிக்க விளக்குத் தம்பம் நாட்டப்பெற்றது. தண்ணீர் கொண்டுவருவதற்கும், யாத்திரை வாசிகளுக்கு உணவு அளிப்பதற்கும் நிலங்கள் தானம் செய்யப்பட்டன. தினந்தோறும் சந்நிதியில் தேவாரப் பதிகங்களை உடுக்கை, தாளம் முதலிய இசைக் கருவிகளுடன் பாடுவதற்கு நிலங்கள் ஒதுக்கப்பெற்றன. ஓர் திருவிழாவுக்காக எருமைக்குளம் என்னும் கிராமம் விடப்பட்டது. இலாடராயர் புகழ் விப்ரகண்டன் என்பவன், பிராமணர்களுக்கு உணவளிக்க நிலம் அளித்துள்ளான். திம்மிகுடியைச் சேர்ந்த ஓர் அம்மையார் மலைமேல் உள்ள கோயிலில் சில திருப்பணிகளைச் செய்திருக்கிறார். கிளியூர் நாட்டுச் சிறுதவூர் செம்பியன் வெய்திவேளான் என்பவன் மலைமேல் உறையும் பெருமானுக்கு விமானம் எடுப்பித்துள்ளான். கி. பி. 13–2–1219ல் கோயிலுக்குச் சில நிலங்களும், பரகேசரி வர்மன் மூன்றாம் ராஜேந்திரன் காலத்தில் கி. பி. 12–2–1245ல் சில நிலங்களும் தானம் செய்யப்பட்டன.

இவைகளில் இராஜகேசரி வர்மனுடைய 3வது ஆண்டில் கோயிலில் தினந்தோறும் 3 நேரங்களிலும் தேவாரத் திருப்பதிகம் பாடுவதற்கு ஆளுங்கணத்தாரான பெருங்குறிச் சபையோரால் நிலம் கிரயம் செய்யப்பட்டது. இக்கல்வெட்டின் நகல் பின்வருமாறு :—
756 (129—1914)

"ஸ்வஸ்திஸ்ரீ கோ. இராஜகேசரிபன்மற்கு யாண்டு மூன்றுவது, தென்கரை பிரமதேயம் ஸ்ரீகண்ட சதுர் வேதி மங்கலத்துப் பெருங்குறி மகாசபையோம் திரு வெறும்பியூர் ஆள்வார்க்கு ஸ்ரீ விமானம் எடுப்பித்த சிறுதவூருடையான் வேளூரான் வீரநாராயணச் செம்பி யன் வெய்திவேளார்... திருவெறும்பியூர் ஆள்வார்க்குத் திருப்பதிகம் பாடுவார்க்கு நிவந்தமாக இவர்க்கு விற்றுக் கொடுத்த நிலமாவது: எங்களூரின் தென்பாடேயேங் கின பொதுநிலத்துக்குக் கீழ்பாற்கெல்லை திருவெறும்பி யூர் ஆள்வார் நிலம் நாகாலுக்கு மேற்கும், தென்பாற் கெல்லை நாகாலுக்கு வடக்கும் மீபாற்கெல்லை இச்செம்பி யன் வெய்திவேளார் ஸ்ரீ முகங்கொணர்ந்து கல்லிவிட்ட கிளியூர் வாய்க்காலுக்குக் கிழக்கும், வடபாற்கெல்லை இவ்வூர் வடலூர் மாப்பானிக்கன் நிலத்துக்கும் திரு வெறும்பியூர் ஆள்வார் பொது நிலத்துக்கும் தெற்கும், இவ்விசைத்த பெருநான்கெல்லையுள் அகப்பட்ட நிலமும் (அத்தாணையிலமூ) இத் திருவெறும்பியூர் ஆள்வாருக்கு இவ்வூர் (திருக்குறமறக்கா வீரட்டறைரண்ண) புருஷோத் தம நீரோட்டிக்குக் கொடுத்த நிலமும், முன் இத் திரு வெறும்பியூர் ஆள்வார் நிலமான நிலமும் நீக்கி நின்ற நிலம், சபையோம் சபைப் பொதுவாய்க்கிடந்த நிலம் அத்துணை யுண்ணிலம் ஒழிவின்றிச் செம்பியன்வேதி வேளார்க்கு விற்றுக்கொடுத்து நாங்கள் விற்றுக்கொடுத்த நிலத்துக்கும் முன் தேவற்குடி வசம்பெற்ற இந்நிலத் துக்கும், முன் தேவர் நிலத்துக்கும் சந்திராதித்த வலம் இறை காவலாகவும் நாங்கள் விற்ற நிலத்துக்குக் கிரேயக் (கிரவ்யமும்) ஆகவும், எம்மிலிசைத்த விறை காவற் பொன்னும் கிரேயந்தஸ்யமும் விலையாவணக் கழியேகைச் செய்து விலையறக்கொண்டு இந்நிலத்தின் மேல் சபையோம் வைப்பினல் வடலவூர் மாப்பணிக் கன்......இச்செம்பியன் வேதி வேளாரே கொடுத்துச் சென்று கொள்ளக் கடவாராக. இப்பரிசோடே சந்தி ராதித்த வலம் இறைகாவலாக விலைக்கற விற்றுப் பொருளறக் கொண்டு விற்று விலையாவணம் செய்து

கொடுத்தோம். வேளான் வீரநாரணனுன செம்பியன் வெய்திவேளானுக்கு ஸ்ரீகண்ட சதுர்வேதி மங்கலத்துப் பெருங்குறிச் சபையோம். பெருங்குறி சபையார் பணித் தருளப் பணியால் இவ்விலையும் இறைகாவலும் எழுதி னேன். இவ்வூர் மத்தியஸ்தன் தர்மப் பிரியரான கலிவிசையன்றன் எழுத்து. சேகரனேன் இவை என் எழுத்து.

இந்நிலமும், ஸ்ரீகண்ட சதுர்வேதி மங்கலத்தாரும், திருவெறும்பியூராரும் தங்களில் சிமாவாதமாய்க் கிடந்த நிலம் இவ்விரண்டு திறத்தாரிடையும் நான் விலைக்குக் கொண்ட நிலமுங் கொண்டு இவ்வாள்வாரை நான் பாடின திருப்பதிகம் மூன்று சந்தியும் தங்கையும் தாளமும் கொண்டு நால்வரடிகள் மாதிருப்பதியமும் பாடுவதாக சந்திராதித்தரால் செய்து கொடுத்தேன். செம்பியன் வேதிவேளாளனேன். இது பன்மாகேஸ்வரரக்ஷை."

இக்கல்வெட்டால் அக்காலத்தில் வழங்கிய உரை நடையின் போக்கும், கோயில்களில் சைவ சமய குரவர் நால்வர் பாடிய தேவாரப் பதிகங்கள் பாடப்பட்டு வந்ததும், வேறுபல செய்திகளும் தெரியவருகின்றன.

112791

## 15. சிற்பச் சிறப்புக்கள்

கோயில், மலையின்மேல் கட்டப்பட்டுள்ளது. சுவாமி கோயிலின் அர்த்த மண்டபத்தில் உள்ள 6 தூண்கள் மிகப் பழமையானவை. போதிகைகள் சதுரமாகவும், தூணில் பூ வேலைகள் அமைக்கப்பெற்றதாகவும் உள்ளன. இவை ஜெயின சம்பந்தமுடையவை எனச் சொல்லப்படுகின்றன. "The Temple is well carved and its appearance suggests a Jain origin" முன் மண்டபத்தில் தூண்களுக்குமேல் இரட்டைச் சிங்கங்கள் தாங்குவதுபோல் அமைக்கப்பட்டுள்ளன.

Q23:38.21192.7
N52

## 16. சரித்திர வரலாறு

இவ்வூரைப் பற்றிய சரித்திரச் செய்திகளால் 1752ல் ஆங்கிலேயர்களுக்கும்,பிரஞ்சுக்காரருக்கும் நடந்த போரில் இத்தலம் போர் வீரர்கள் தங்கத்தக்க ராணுவ ஸ்தலமாக இருந்ததாகத் தெரியவருகிறது. மலையின் வடபுறத்தில் இடிந்து கிடக்கும் இடம் ஒரு காலத்தில் நூற்றுக்கால் மண்டபமாக இருந்து வந்தது. அவ்விடத் திலிருந்த கருங்கற்களும். தூண்களும் கல்லணை முதலிய கட்டிடங்களுக்கு உபயோகிக்கப்பட்டதாகச் சொல்லப் படுகிறது.

## 17. புராண வரலாறுகள்

இத்தலத்தின் பெருமைகளைத் தெரிவிக்கும் திரு எறும்பியூர்ப் புராணம் என்னும் நூல் ஒன்று உண்டு. பாட்டும் உரைநடையும் சேர்ந்தது. அதில் நைமிசாரணி யப் படலம் முதல் முனிவர்கள் பூசித்த படலம் வரை யில் 17 படலங்கள் உண்டு. அவைகளில் கூறப்பட்ட முக்கிய வரலாறுகள் :— மணிகூடாசலவரவு, பிரமன் பூசித்தது, திருமகள் பூசித்தது, திருமகள் திருமணம், தேவர்கள் சரணமடைந்தது, தேவர்கள் பூசித்தது, இந் திரன் பூசித்தது, இரதி அருச்சித்தது, அக்கினி சாப விமோசனம் பெற்றது, சண்முகன் தவம் புரிந்தது, அகத்தியன் பூசித்தது, அகத்தியன் உபதேசம் பெற்றது, முனிவர்கள் பூசித்தது முதலியன. இவ்வரலாறுகளில் சில சுருக்கமாகக் கூறப்படும்.

### 1. மணிகூடாசல வரவு

ஒருகாலத்தில் திருமாலுக்குப் படுக்கையான ஆதி சேஷனுக்கும், வாயுதேவனுக்கும் தெய்வசங்கற்பத்தால் கலகம் நேர்ந்தது. ஒவ்வொருவரும் தற்பெருமை பாராட்டித் தங்கள் வலிமைகளைச் சோதிக்க முயன்ற னர். இது காரணமாக ஆதிசேடன் வட கயிலையாகிய

இமயமலையைத் தன் உடலால் வளைத்துப் பிணித்துக் கொண்டான். வாயுதேவன் தன் பலங்கொண்ட மட்டும் சண்டமாருதமாக வீசத் தொடங்கினான். வாயுவின் கொடுமையைத் தாங்கமாட்டாமல் தேவர்கள் அச்சங் கொண்டு பிரமனிடம் சென்று முறையிட்டனர். பிரமன் ஆதிசேஷனிடம் சென்று பேசத் தொடங்கினான். அப் போது ஆதிசேடன் தன் தலைகளைத் தூக்கவே அதுவே சமயமென்று வாயுதேவன் மிகப் பலமாகக் காற்றை வீசவே அம்மலையின் சிகரங்கள் ஏழு தீவுகளில் சென்று விழுந்தன. ஓர் சிகரம் இந்தத் திருவெறும்பியூரில் விழுந்தது. இதனால் இம்மலை தென்கயிலாயம் என்றும், மணிகூடம் என்றும், இரத்தினகூடம் என்றும் பெயர் பெறலாயிற்று. (இவ்வரலாறு திரிசிராமலைக்கு ஏற்பட்ட கதையைப்போலவே அமைந்துள்ளது.)

## 2. பிரமன் பூசித்தது

ஒருகாலத்தில் நான்முகக் கடவுளான பிரமன் தன் பாவ நிவர்த்திக்காக இத்தலத்துப் பெருமானைப் பூசித்து அருள்பெற விரும்பினான். அவ்வாறே இத்தலத்துக்கு வந்து சிலகாலம் தங்கியிருந்து இறைவனைப் புறத்தே பூசித்ததோடல்லாமல் அகத்தேயும் பூசைசெய்து வரலா னான். எண்வகைத் திக்குப்பாலர்களுக்குரிய மந்திரங் களையும் ஐந்தெழுத்து மந்திரங்களையும் சொல்லி வழி பட்டான். தன் பெயரால் பிரம தீர்த்தம் என்னும் பாவநாசத் தீர்த்தத்தை உண்டாக்கி ஸ்நானம் செய்து பெருமானைப் போற்றி வந்தான். கைலாயவாசியாகிய சிவபெருமான் பிரமனுக்குக் காட்சி கொடுத்துப் பல வரங்களைத் தந்தருளினான். பிரம தீர்த்தமாகிய தெப்பக் குளத்தில் ஆண்டுதோறும் தெப்ப விழா நடைபெறு கிறது.

## 3. தேவர்கள் பூசித்தது

முற்காலத்தில் தாருகாசூரன் என்னும் அசுரன் மிகுந்த வரபலத்தால் தேவர்களையும் முனிவர்களையும்

துன்புறுத்தி வந்தான். அசுரப் படைகளுடன் விண்ணுலகம் சென்று தேவர்களைப் போருக்கழைத்துப் போரிடலானான். தேவர்களும் இந்திரனும் எதிர்நின்று போர் செய்யமுடியவில்லை. தாருகன் அவர்களைத் தோற்கடித்து தேவலோகத்தைக் கைப்பற்றிக் கொண்டான். தேவர்கள் அஞ்சிப்போய்ப் பிரமனிடம் முறையிட்டனர். பிரமன் அவர்களைப் பூலோகத்தில் தென்கயிலாயமாகிய திருவெறும்பியூருக்குச் சென்று இறைவனைப் பூசித்தால் தாருகாசுரனை அழிக்கத்தக்க ஓர் புதல்வனை அருள்வான். அவனையன்றி அசுரனை அழிக்கமுடியாதென்று கூறினன்.

தேவர்களும் தாருகனுக்குப் பயந்து எறும்பு வடிவங் கொண்டு இத்தலத்தை அடைந்து பெருமானை வழிபட்டுத் தங்கள் குறைகளைத் தெரிவித்தனர். பெருமான் உமாதேவியுடன் தோன்றிக் காட்சி தந்து அவர்கள் குறைகளைப் போக்குவதாகக் கூறித் தேவர்களை இவ்விடத்தில் சிலகாலம் தங்கியிருக்கும்படிக் கட்டளையிட்டான். தேவர்கள் அவ்வாறே இறைவனைப் பூசித்து வரலானார்கள்.

## 4. பெருமான் திருமுடி சாய்த்தது

தேவர் கூட்டத்துடன் தேவர்களுக்குத் தலைவனான இந்திரனும் இத்தலத்துக்கு வந்திருந்தான். எறும்பியூர் ஈசன் இந்திரனை இவ்விடத்திலிருந்து கருநெய்தல் மலர்களால் பூசித்து வரவேண்டுமென்று கட்டளையிட்டான். இவ்வாறு திருஎறும்பியூர் ஈசன் கட்டளைப்படி வச்சிரப் படையை உடைய இந்திரன் எறும்பு வடிவத்துடன் நாள்தோறும் ஆயிரம் கருநெய்தல் மலர்களால் இறைவனைப் பூசித்து வந்தான். இறைவனும் அப் பூசையைத் தன் திருமுடி சாய்த்து ஏற்றுக்கொண்டான். இதை, "இருங்குலிசக் கையான் எறும்பான அஃறிணையின் உருக்கொடு நம் இறையவனை இகவா அன்பால் பூசை

செய் எறும்பீசன்'' என்றும், ''மகவானும் எறும்பின் உருக்கொடு எறும்பீசத்தே சூழ்ந்துபோற்ற'' என்றும், புராணம் கூறுகின்றது. இதை உலகத்தார்க்கு உணர்த் தவே பெருமான் இன்றும் திருமுடிசாய்த்த — தலை வணங்கிய கோலத்துடன் விளங்குகின்றான். இதனால் தலைவணங்கிப் போற்றும் மெய்யடியார்களுக்கு இறை வனும் தலைவணங்கி அருள் செய்கின்றான் என்பது புலனாகின்றது. ''தொண்டாகிப் பணிவார்கட்கு இனி யான்தன்னை'' யென்று அப்பர் கூறுகின்றார்.

இந்தத் தலத்தைப்போலவே திருவிரிஞ்சைத் தலத் திலும், திருப்பனந்தாளிலும் பெருமான் திருமுடிசாய்த் திருக்கின்றான். திருவிரிஞ்சைப் பதியில் சிவசருமன் என் னும் சிறுவனுக்குத் திருமுடி வளைத்துக் கொடுத்ததால், "எட்டாத பாலகனுக்கு இரங்கி முடிசாய்த்தபெருமான்" என்னும் பழமொழி வழங்குகின்றது. திருப்பனந்தாளில் தாடகை என்னும் பெண்ணுக்காக முடிசாய்த்து அருள் செய்தான்.

## 5. அகத்தியர் ஞான உபதேசம் பெற்றது

கும்பமுனியாகிய அகத்தியர், உலோபமுத்திரை என்பவளைத் திருமணம் செய்துகொண்டு யாத்திரை யாகப் புறப்பட்டுப் பல தலங்களுக்கும் சென்று தரிசித் துக் காவிரியின் தென்கரையில் உள்ள திருவெறும்பியூர் என்னும் இரத்தினகூடத்திற்கு வந்து அங்குள்ள குமார தீர்த்தத்தில் குளித்து, இரத்தினாசல நாதனையும் இரத்தி னாம்பாளையும் ஆகம முறைப்படி பூசித்து வந்தார். ஒரு நாள் இறைவன் தன் தேவியுடன் காட்சிகொடுத்து அருள் செய்தான். அப்போது அகத்தியர் பெருமானி டம் தமக்கு ஞான உபதேசம் செய்ய வேண்டினார். பெருமான் முனிவருக்கு முருகப் பெருமானைக் கொண்டு உபதேசம் செய்விப்பதாக அருளினன். அகத்தியரும் முருகப் பெருமானைப் பூசித்து வரலானார். அப்போது

முன்னவனும் முருகன் தன் தேவிகளுடன் மயில் வாகனத்தில் தோன்றிக் காட்சி கொடுத்து ஞானோபதேசம் செய்தருளினர். அவை வருமாறு :—

உலகத்தில் அநாதியாய் உள்ள பொருள்கள் கடவுள், உயிர், உலகம் எனப்படும். இவை பதி, பசு, பாசம் என்றும் சொல்லப்படும். உயிர்கள் பாசத்தினின்றும் நீங்கிப் பதியை அடைவதற்குரிய நெறியே சிவநெறியாகும். இது பதிநெறி, செந்நெறி, அருள்நெறி, திருநெறி, தவநெறி, சன்மார்க்கம் என்றும் சொல்லப்படும்.

**பதியின் இயல்பு** : பசுபதியாகிய இறைவன் ஆதியந்தமில்லாதவனாய், ஏகனாய் நித்தனாய், நிமலனாய், அசலனாய், அகண்டிதனாய், ஆனந்த உருவனாய், அளத்தற்கரியனாய், அருவாய், உருவாய், அருவுருவாய், இம்மூன்றிற் படாதவனாய், பாசங்களிலிருந்து நீங்கியவனாய், விளங்குவான். அவனன்றி ஓர் அணுவும் அசையாது.

**பசுவின் இயல்பு**: பசுக்களாகிய ஆன்மாக்கள் ஆணவ மலத்தால் மறைக்கப்பட்டதாய், சார்ந்ததன் வண்ணமாய், தமது புண்ணிய பாவங்களுக்கு ஏற்ற உடல்களைப் பெற்று இன்ப துன்பங்களை அனுபவிப்பதாய் விளங்குவன. பாசத்தாற் கட்டப்பட்ட பசுவைப் போன்றதால், உயிர்கள் பசு எனப்பட்டன. இந்த ஆன்மாக்கள் விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என மூவகைப்படுவர். ஆணவமலம் உடையவர் விஞ்ஞானகலர் எனவும், ஆணவம் கன்மம் என்னும் இருமலமுடையவர் பிரளயாகலர் எனவும், ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களையுடையவர் சகலர் எனவும் பெயர் பெறுவர். இவர்களுக்குத் தனுகரண புவன போகங்களாக உள்ளவை முறையே சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதிமாயை என்பன. இறைவன் விஞ்ஞானகலருக்கு அறிவுக்கறிவாய்த் தன்மையிடத்தினின்றும், பிரளயாகலருக்குத் தன் இயற்கை வடிவத்தையே முன்னிலை யிடமாகக்

காட்டியும், சகலருக்கு அவ்வடிவு போன்ற குருவாகிப் படர்ந்து வந்து அவ்வடிவுக்குள் மறைந்து நின்றும் ஞானத்தை அருள்வன். எனவே, இறைவன் ஆன்மாக்களிடத்தில் தன்மை, முன்னிலை, படர்க்கை என்னும் மூவிடங்களில் நின்று அருளும் முறை கூறப்பட்டது.

**பாச இயல்பு**: உயிர்கள் பதியைச் சாரவொட்டாமல் தடையாயுள்ளவை ஆணவம், கன்மம், மாயை என்பன. **ஆணவம்** என்பது செம்பிற்களிம்புபோல உயிரைப் பற்றிக்கொண்டு அறிவை மறைப்பதாய்ப் பூத இருளினும் இருளுடையதாய் விளங்குவது. ஆன்மாக்களை அணுத்தன்மை செய்வதால் ஆணவம் எனப்பட்டது. **கன்மம்** என்பது உயிர்கள்தோறும் விரிந்து அனுபவப் பொருளாய் விளங்குவது. இது சஞ்சிதம், பிராரத்துவம், ஆகாமியம் என மூவகைப்படும். சஞ்சிதம் என்பது பிறவிகள்தோறும் செய்த வினைகளின் தொகுதி. பிராரத்துவம் என்பது எடுத்த பிறவியில் அனுபவிக்கப்படுவது. இது ஆதி தெய்வீகம், ஆதியான்மீகம், ஆதிபௌதீகம் என மூவகைப்படும். **மாயை** என்பது ஆன்மாக்களுக்குத் தனு கரண புவன போகங்களைக் கொடுத்து மயக்கத்தைச் செய்வது. இவ்வாறு உயிர்கள் பாசங்களினின்றும் நீங்கிப் பதியையடையும் முறையை இறைவன் தட்சிணாமூர்த்தி கோலங்கொண்டு தனது கைவிரல்களின் சின் முத்திரையால் காட்டியுள்ளான்.

இனி இறைவன் திருவருளைப் பெறுதற்கு நாடிச் செல்லும் மார்க்கங்கள் நான்கு வகைப்படும். அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன. இவை அரும்பு, மலர், காய், கனி போன்றவை. **சரியை** என்பது புறவழிபாடு. காலையில் எழுந்து நீராடி நந்தவனத்திற்குச் சென்று நறுமலரெடுத்துப் பூமாலை கட்டல், ஆலயத்தில் மெழுகுதல், சாந்தரைத்தல், விளக்கிடுதல் முதலியன. **கிரியை** என்பது புறத்தும் அகத்தும் சேர்ந்து செய்யப்படுவது. ஆன்மசுத்தி முதலிய பஞ்ச சுத்தி

களைச் செய்து மந்திர முறைகளால் சோடச உபசாரத்துடன் பூசை செய்தல். **யோகம்** என்பது அகவழிபாடு. ஐம்புலன்களின் வழியே மனத்தைச் செல்லவிடாமல் ஒரு நிலைப்படுத்தி நிட்டை கூடியிருத்தல். இது இயமம், நியமம், ஆசனம், பிராணுயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என எட்டுவகைப்படும். இயமம் என்பது பிற உயிர்களுக்கு இடர் செய்யாமை. பொய் களவு முதலியன நீக்கி இந்திரியங்களை வெல்லல். நியமம்—கோபம் நீங்கிப் பெற்றதில் மகிழ்ந்து குருமொழி கொண்டு ஆசாரத்தில் நிற்றல். ஆசனம்—பத்மாசனம் முதலிய ஆசனங்களிலிருந்து யோகசித்தி பெறுதல். பிராணுயாமம்—இரேசகம், பூரகம், கும்பகம், என்ற மூவகையாய்ச் சுவாசத்தை அடக்கியாளும் முறை. வலமூக்கைப் பெருவிரலாற் புதைத்துப் புறத்தேயுள்ள வாயுவை இடமூக்கினுல் உள்ளே பூரகஞ் செய்து, இரண்டு மூக்கைப் பெருவிரலணி விரல்களால் பிடித்து உள்ளே உள்ள வாயுவைக் கும்பித்து, அணிவிரலால் இடமூக்கைப் பிடித்து உள்ளேஉள்ள அசுத்த வாயுவை வலமூக்கினுல் இரேசகஞ் செய்தல். பிரத்தியாகாரம்—நல்லுணவு. இந்திரியங்களைப்புறம்புகாமல் நிறுத்தல். தாரணை மனத்தை ஒருவழி நிறுத்துதல். தியானம்—இடையருது சிந்தித்தல். சமாதி — மனத்தைப் பரம்பொருளோடு ஐக்கியப்படுத்தி நிற்றல். தன்னை மறந்து காந்தமும் இரும்பும்போல வேறுபடாது ஒன்ருய் விளங்குதல். இவை எட்டும் யோகத்தில் அடங்கும். **ஞானம்** என்பது பாசத்தினின்றும் நீங்கி இருவினையொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் என்னும் பக்குவ நிலையடைந்து ,பண்ணும் இசையும், பழமும் சுவையும்போல ஒன்றிப் பரம்பொருளோடு இரண்டறக் கலத்தல்.

இவ்வாறு முருகப்பெருமான் கூறிய உபதேசங்களை அகத்திய முனிவர் பக்தியுடன் கேட்டு, மலைமேல் உறையும் பெருமானையும் தேவியையும் வணங்கிவிட்டுத் தமது இருப்பிடம் சேர்ந்தார்.

## 18. இலக்கியங்கள்

### 1. திருநாவுக்கரசர் பாடிய திருக்குறுந்தொகை:

விரும்பியூறு விடேல்மட நெஞ்சமே
கரும்பின் ஊறல்கண்டாய் கலந்தார்க்கவன்
இரும்பினூ றலருததோர் வெண்தலை
எறும்பியூர் மலையான் எங்கள் ஈசனே. 1

பிறங்கு செஞ்சடைப் பிஞ்ஞகன் பேணுசீர்க்
கறங்கு பூதகணமுடைக் கண்ணுதல்
நறுங்குழல் மடவாளொடு நாடொறும்
எறும்பியூர் மலையான் எங்கள் ஈசனே. 2

மருந்து வானவர் தானவர்க்கு இன்சுவை
புரிந்த புன்சடைப் புண்ணியன் கண்ணுதல்
பொருந்து பூண்முலை மங்கை நல்லாளொடும்
எறும்பியூர் மலையான் எங்கள் ஈசனே. 3

நிறங்கொள் கண்டத்து நின்மலன் எம்மிறை
மறங்கொள் வேல்கண்ணி வாள்நுதல் பாகமாய்
அறம் புரிந்தருள் செய்தஎம் அங்கணன்
எறும்பியூர் மலையான் எங்கள் ஈசனே. 4

நறும்பொன் நாள்மலர்க் கொன்றையும் நாகமும்
துறும்பு செஞ்சடைத் தூமதி வைத்துவான்
உறும்பொன் மால்வரைப் பேதையோடு ஊர்தொறும்
எறும்பியூர் மலையான் எங்கள் ஈசனே. 5

கறும்பி ஊர்வன ஐந்துள காயத்தில்
திறம்பி ஊர்வன மற்றும் பலவுள
குறும்பி ஊர்வதோர் கூட்டகத் திட்டுஎனை
எறும்பியூர் அரன் செய்த இயற்கையே. 6

மறந்து மற்றிது பேரிடர் நாடொறும்
திறம்பிநீ நினையேல் மட நெஞ்சமே

புறஞ்செய் கோலக் குரம்பையில் இட்டெனை
எறும்பியூர் அரன் செய்த இயற்கையே. 7

இன்பமும் பிறப்பும் இறப்பின் னொடு
துன்பமும் உடனே வைத்த சோதியான்
அன்பனே அரனே என்று அரற்றுவார்க்கு
இன்பனாகும் எறும்பியூர் ஈசனே. 8

கண்ணிறைந்த கனபவளத் திரள்
விண்ணிறைந்த விரிசுடர்ச் சோதியான்
உள்நிறைந்து உருவாய் உயிராயவன்
எண்ணிறைந்த எறும்பியூர் ஈசனே. 9

நிறங்கொள் மால்வரை ஊன்றி எடுத்தலும்
நறுங்குழல் மடவாள் நடுக் கெய்திட
மறங்கொள் வாளரக்கன் வலிவாட்டினான்
எறும்பியூர்மலை எம்இறை காண்மினே. 10

## 2. திருநாவுக்கரசர் பாடிய திருத்தாண்டகம் 10 பாடல்கள் :-

பன்னியசெந் தமிழறியேன் கவியேன்மாட்டேன்
எண்ணோடு பண்நிறைந்த கலைகளாய
தன்னையுந்தன் திறத்தறியாப் பொறியிலேனைத்
தன்திறமும் அறிவித்து நெறியுங்காட்டி
அன்னையையும் அத்தனையும் போலஅன்பாய்
அடைந்தேனைத் தொடர்ந்தென்னை ஆளாக்கொண்ட
தென்னெறும்பி யூர்மலைமேல் மாணிக்கத்தைச்
செழுஞ்சுடரைச் சென்றடையப் பெற்றேன்நானே. 11

அருந்தவத்தின் பெருவலியால் அறிவதன்றி
அடலரக்கன் தடவரையை எடுத்தான் திண்தோள்
முரிந்துநெரிந் தழிந்துபா தாளமுற்று
முன்கைநரம் பினைஎடுத்துக் கீதம்பாட
இருந்தவனை ஏழுலகும் ஆக்கினானை
எம்மானைக் கைம்மாவின் உரிவைபோர்த்த
திருந்தெறும்பி யூர்மலைமேல் மாணிக்கத்தைச்
செழுஞ்சுடரைச் சென்றடையப் பெற்றேன்நானே. 12

## 3. திருவெறும்பியூர்ப் புராணம் :—

### விநாயகர்

தனச்சிலம்பா மணியேட்டிற் றன்மருப்பால்
வரைந்தருள்க சானனன்வே
தனச்சிலம்பா ளிகரகடு விழிவதன
மாதர்படைத் தலைவனும
தனச்சிலம்பா வணமுறச்செய் கண்ணுதலோன்
தருமூத்த தனையனேர
தனச்சிலம்பா ருங்கமல மலர்ப்பதத்தை
அனுதினமும் சாற்றிவாழ்வாம். 1

### திருவெறும்பீசர்

இறும்பான சிறகரரிந் துலகுயிரைக்
காத்தவிருங் குலிசக்கையான்
எறும்பான அஃறிணையின் உருக்கொடுநம்
இறையவனை இகவா அன்பான்
நறும்பாத வஞ்செறியும் எறும்பீசந்
தனையெய்தி நண்ணிப்பூசை
உறும்பாச மகற்றிடச்செய் எறும்பீசன்
அடிமலரை உன்னிவாழ்வாம். 2

### சுகந்தகுழலாள்

மகந்தனையே பலபுரிந்த மகவானும்
அமலனடி மருவுமின்ப
சுகந்தனையெய் திடவெறும்பின் உருக்கொடெறும்
பீசத்தே சூழ்ந்துபோற்ற
உகந்தனையான் தனக்குதவும் இறைவனிடப்
பாகத்தே ஒருவா தோங்கும்
சுகந்தநறுங் குழலமுதை அன்பின்மொழிந்
தென்பிறவித் துரிசுதீர்வாம். 3

## பாலசந்திரவிநாயகர்

பூமேவும் ஒருகொம்ப னென்றதிருப்
பேரென்றும் பொலியக்கோடு
நாமேவும் ஆம்பல்முகத் தவுணனெடும்
சமர்புரிந்த ஞான்றுமன்றிப்
பாமேவு பாரதங்கை யானெழுதும்
அஞ்ஞான்றும் பரிவினேந்தும்
காமேவும் எறும்பியூர்ப் பாலசந்திர
விநாயகனைக் கருதிவாழ்வாம். 4

## சுப்பிரமணியர்

சரந்துரந்து மரமேழுந் துளைத்தானும்
கமலமலர்த் தவிசினனும்
கரந்தொருவே யாய்ப்புகலி வயினிருந்த
அயிற்குலிசக் கையினனும்
இரந்துநெடுஞ் சூர்க்கொடுமை எடுத்தியம்பல்
இகலியன்றி லெனும்பேர் வெற்பின்
உரந்துளைத்து நெடுஞ்சூர்மா மரந்துளைத்த
வேலனடி உன்னி வாழ்வாம். 5

சக்கரமா தவன்புகழும் திருமருகன்
எறும்பியூர் தன்னில் வாழஞ்
சக்கரமா தேவனிதம் புகழ்ந்துபதம்
பரவுகுரு சாமிநாதன்
சக்கரமா தினைமணந்து மணம்பெறுவான்
விசும்புதவழ் தடத்தினிற்றஞ்
சக்கரமா தங்கன்வர நினைத்தபெருந்
தயாநிதியைச் சார்ந்து வாழ்வாம். 6

## சண்டேசுரர்

விச்சுவாதி கனுநம்பி றைவனைமா
துமையின்மண்ணின் வியந்து நாட்டி
நச்சியருங் கற்றுவின் பாலாட்டி
அருச்சிப்ப நலிந்ததாதை

அச்சுறவன் னவன்றனைத் தடிந்துமறைப்
　　பொருளாக நம்பன் தானே
பொச்சமிலன் பினினடைந்த திருத்தொண்டர்
　　பிரானடியே புகன்று வாழ்வாம். 7

## சமயாசாரியர்

கல்லாலும் அல்லாமல் கழற்காலின்
　　செருப்பாலும் கையிலேந்தும்
வில்லாலும் அடியுண்ட விமலனடி
　　இணைக்கன்பே மேவினாலும்
புல்லாலும் நீராலும் போற்றநனி
　　அருள்சுரக்கும் புனிதன் தொல்சீர்
சொல்லாலும் பொருளாலும் துதித்தாண்ட
　　நால்வர்பதம் தொழுது வாழ்வாம். 8

## முருகன் துதி

சங்கரன் குருவேபோற்றி சண்முகத் தலைவாபோற்றி
மங்கள அபிலாய்போற்றி மயிலிவர் மணியேபோற்றி
எங்குலக் கொழுந்தேபோற்றி எளியருக் கெளியாய்போற்றி
மங்கைபாலகனேபோற்றி மாதவன் மருகாபோற்றி. 9

சங்கரி மகனேபோற்றி சடக்கரத் தவனேபோற்றி
கொங்குயிர்கடம்பாபோற்றி குறமகள் கொழுநபோற்றி
கங்கையில் வளர்ந்தாய்போற்றி கடவுடன் கடவுள்போற்றி
இங்கெனை ஆள்வாய்போற்றி இருள்மல மிரிப்பாய்போற்றி. 10

வளங்கெழு பாதநான்கும் வழங்குறும் வள்ளால்போற்றி
விளங்கிழை தேவசேனை விருப்புறும் விமலாபோற்றி
துளங்கலில் வள்ளிமாதின் துணையடித்தொழும்பாபோற்றி
உளமல பாசமைந்தும் உருக்கிடும் உறவாபோற்றி. 11

குமர நாயகனேபோற்றி கோமளக் கொழுந்தேபோற்றி
அமர நாயகனேபோற்றி அயிற்கரத் தமலாபோற்றி
பமரமார் தொடையாய்போற்றி பார்ப்பதி பாலாபோற்றி
விமலமார் நாமபோற்றி விரைகழல் முருகாபோற்றி 12

மரகத மயிலாய்போற்றி மாயவன் மருகாபோற்றி
சுரர்பணி சுகமேபோற்றி சூக்குமச் சொரூபாபோற்றி
வரமிகு பரனேபோற்றி வள்ளிதன் மணாளாபோற்றி
கரமதில் வேலோய்போற்றி கற்பகக் காவேபோற்றி. 13

என்னிரு கண்ணேபோற்றி எறும்பியூ ரெந்தாய்போற்றி
உன்மன வெளியேபோற்றி உம்பருக் கும்பாபோற்றி
தன்வினை யில்லோய்போற்றி தணிகையைத் தணவாய்போற்றி
மன்னிய பரனேபோற்றி மங்கள மறையோய்போற்றி. 14

## சிவபெருமான் துதி

இலக்குமி நகரோய்போற்றி ஏதிலார்க் கிலக்கேபோற்றி
மலக்குறும் பறுப்போய்போற்றி மாதவன்மகிழ்வேபோற்றி
இலக்கணம் மிகுந்தோய்போற்றி இருமையும் ஈவோய்போற்றி
உலப்பிலா அருளோய்போற்றி உம்பர்கள் உறவாபோற்றி. 15

மாதவ னுளத்திலென்றும் மகிழ்வுடன் வதிவோய்போற்றி
ஆதவ னங்கிஇந்தா யானமுக் கண்ணுபோற்றி
வேத வாகமங்கள்யாவும் விளம்பிய விகிர்தாபோற்றி
நாததத்துவத்தைத் தாண்டி நடமிடு மெந்தாய்போற்றி. 16

தேவர்கள் அகந்தையாவும் துரும்பினால் தொலைத்தாய்போற்றி
நாவலூர் நம்பிஏத்த நங்கைபால் நடந்தோய்போற்றி
பாவலர் நிதமும் சூழ்ந்து பணிபெறும் பரமாபோற்றி
பூவலர் தடஞ்சூழ்வேத புரிதனைப் புரந்தோய்போற்றி. 17

ஆலமுண் டவனே போற்றி ஆதரித் தருள்வாய்போற்றி
பாலலோசனனே போற்றி பகவதிப் பரனே போற்றி
கோலவெண் விடையாபோற்றி கோதறு குணனேபோற்றி
காலன்றன் காலாபோற்றி கானமர் கழலாய்போற்றி. 18

மதகரி உரியாய்போற்றி மான்மழு வரதாபோற்றி
மதனடர் விழியாய்போற்றி மலைமகள் கணவபோற்றி
மதுரித மகிபாபோற்றி மாதவர் வாழ்வேபோற்றி
விதுமுடி சடையாபோற்றி வேதனை ஒழிப்பாய்போற்றி.19

எண்குண மணியேபோற்றி எறும்பியூ ரெந்தாய்போற்றி
பண்தனில் இசையேபோற்றி பழமதின் சுவையேபோற்றி
விண்ணிடை விளக்கேபோற்றி விழைசுக வியனேபோற்றி
கண்ணினுள் கண்ணேபோற்றி கதுவியகவினேபோற்றி.20

தில்லையில் நடனுபோற்றி திகம்பர சிவமேபோற்றி
அல்லலை அடர்ப்பாய்போற்றி அரியயற் கரியாய்போற்றி
எல்லையில் குணனேபோற்றி எழிலுரு மெழிலாய்போற்றி
பல்வினை ஒழிப்பாய்போற்றி பார்ப்பதி பாகாபோற்றி. 21

சுந்தர மணியேபோற்றி சுகமருள் சுடரேபோற்றி
மந்திர முதலேபோற்றி மறையவர் வாழ்வேபோற்றி
சந்திர முடியாய்போற்றி சண்முகன் தாதாபோற்றி
இந்திரற் கருள்வோய்போற்றி ஏந்தலே ஏறேபோற்றி. 22

மலைவளை வில்லாபோற்றி மறைமுதல் வரதாபோற்றி
கலைவளர் கையாபோற்றி காமர்பூங் கழலாய்போற்றி
இலைபொரு சூலாபோற்றி இருமையு மிடுவாய்போற்றி
அலைகட லருளாபோற்றி அப்பனே அன்பாபோற்றி. 23

## வாழ்த்து

அருள்மழை விடாதுபெய்யும் அமலனுடைமைவாழ்க
மருவுருத் ராக்கம்பூதி மந்திரம் மன்னிவாழ்க
பொருவிலிப் புராணந்தன்னைப் புகழுடன் கற்போர்வாழ்க
திருமகள் வதியும் நெல்லைத் திருப்புகழ் முனியும்வாழ்க.

---

112791

திருவெறும்பியூர் நாதன் திருவடி போற்றி

---

திருச்சினுப்பள்ளி யுனைடெட் பிரிண்டர்ஸ் லிமிடெட், திருச்சி.

Q23:38.21M2.T
N53